# மனனப் பகுதி - தரம் 6

## திருவிவிலியப் பகுதி

1. ஆண்டவர் இரக்கமும் கனிவும் உடையவர், எளிதில் சினம் கொள்ளாதவர், பேரன்பு கொண்டவர். (திருப்பாடல் 145:8)

2. ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள், ஏனெனில் அவர் நல்லவர், என்றும் உள்ளது அவரது பேரன்பு. (திருப்பாடல் 136:1)

3. அனைத்து உயிர்களே, ஆண்டவரைப் புகழ்ந்திடுக! அல்லேலூயா! (திருப்பாடல் 150:6)

4. ஆண்டவர் மேன்மைமிக்கவர் என்பதை அறிவேன், நம் ஆண்டவர் எல்லாத் தெய்வங்களுக்கும் மேலானவர் என்பதும் எனக்குத் தெரியும். (திருப்பாடல் 135:5)

5. காதுகள் உண்டு, ஆனால் அவை கேட்பதில்லை, வாய்கள் உண்டு, ஆனால் அவை மூச்சுவிடுவதில்லை. (திருப்பாடல் 135:17)

6. ஆண்டவரைப் புகழுங்கள்! ஏனெனில், அவர் நல்லவர், அவரது பெயரைப் போற்றிப் பாடுங்கள், ஏனெனில், அவர் இனியவர். (திருப்பாடல் 135: 3)

7. ஆண்டவர் தம் மக்களை நீதியுடன் தீர்ப்பிடுவார், தம் அடியாருக்கு இரக்கம் காட்டுவார். (திருப்பாடல் 135:14)

## திருத்தூதர் நம்பிக்கை அறிக்கை

8. இவர் தூய ஆவியாரால் கருவுற்று தூய கன்னிமரியாவிடமிருந்து பிறந்தார். பகுதி – (3)

9. பொந்தியு பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டு சிலுவையில் அறையப்பட்டு இறந்து அடக்கம் செய்யப்பட்டார். பகுதி – (4)

10. பாதாளத்தில் இறங்கி மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். பகுதி – (5)